5: அறிக்கைஅளித்தல்

மதிப்பீட்டுக் குழு

திரு. ஏ. சி. சண்முகம்: மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் சார்பில், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் இழப்பீட்டுத் தொகைகள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் பதினொன்றாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

(முற்பகல் 10–40)

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதிகோருகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: துணைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.